STC.No.328/2024 PW3-சங்கர் நாள்-16.10.2024

**எதிரி ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை-**

1. இவ்வழக்கு சம்பவம் நடந்த போது அ.சா.1 கந்தசாமி, அ.சா.2 மயில் என்கிற காமராஜ், நானும் காரில் சென்றோம் என்றால் சரிதான். எங்களை பின் தொடர்ந்து தி.மு.காவை சேர்ந்தவர்கள் நான்கு லாரிகளில் வந்தார்கள் என்றால் சரியல்ல. ஒரு காரில் மட்டும் வந்தார்கள். இந்த சண்டை நடந்த உடன் என்னுடன் வந்த மாவட்ட கவுன்சிலர் அறிவானந்தம் மற்றும் அனைவரும் இவ்வழக்கின் எதிரியை பிடித்து அங்கயே உட்கார வைத்தோம் என்றால் சரிதான். மாவட்ட கவுன்சிலர் அறிவானந்தம், துணை காவல் கண்காணிப்பாளர் பவானி, காவல் ஆய்வாளர் அம்மாபேட்டை , காவல் உதவி ஆய்வாளர் அம்மாபேட்டை அவர்களுக்கு தகவல் சொல்லி மூன்று பேரும் சம்பவம் இடம் வந்துவிட்டார் என்றால் சரிதான். அங்கு வந்த மூன்று பேரும் சேர்ந்து எதிரி ஓட்டி வந்த லாரி மற்றும் நின்று கொண்டிருந்த JCB அனைத்தையும் காவல் நிலையம் எடுத்து வந்தார்கள் என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன சம்பவம் நடைபெற்ற போது வட்டாட்சியர் பவானி, கிராம நிர்வாக அலுவலர் குறிச்சி கரடு, வருவாய் ஆய்வாளர் குறிச்சி கரடு ஆகியோர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் அ.சா.1 மற்றும் அ.சா.2 மூன்று பேரும் சேர்ந்து அங்கு சம்பவத்தை புகாராக எழுதி அதில் மூன்று பேரும் சேர்ந்து கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். நான் நீதிமன்ற முதல் விசாரணையில் சொன்ன விபரங்கள் அனைத்தும் நானும், அ.சா.1 மற்றும், அ.சா.2 மூன்று பேரும் சேர்ந்து கொடுத்த புகாரிலும் இருந்ததது என்றால் சரிதான். அ.சா.1 என் பெரியப்பா ஆவார். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள போது இவ்வழக்கின் எதிரி அ.சா.1-யை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 – எனக்கு பெரியப்பா என்பதால், நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொன்னதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை-**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாட்களுக்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பாக எதிரி குறிச்சி கரடை அழித்து கொண்டிருந்தார் என்றால் சுமார் 20 நாட்களுக்கு முன்பாக அழித்து கொண்டிருந்தார். எதிரி குறிச்சி கரடை, அழிக்க ஆரம்பித்த நாள் முதலிருந்து எங்களிடம் புகார் சொல்லியிருந்தார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் நடந்த 10 நாட்களுக்கு முன்பாகவே தி.மு.காவை சேர்ந்த பொறுப்பாளர்கள் எதிரியிடம் சென்று மீண்டும் செய்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுப்போம் என்று அறிவிருத்தோம் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் நடப்பதற்கு ஒரு வாரம் முன்பாக தி.மு.கா. பொறுப்பாளர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் சேர்ந்து அம்மாபேட்டை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்றால் சரிதான்.

2. போலிசார் அடிதடி சம்பந்தமான வழக்கு என்றால் வாருங்கள் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு VAO, RI. தாசில்தார் இவ்வழக்கு சம்பவம் நடப்பதற்கு ஒரு வாரம் முன்பு சென்று பார்வையிட்டார்கள் என்றால் சரிதான். அப்பொழுது நான், அ.சா.1 , ஊர் பொதுமக்கள் சென்றோம் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் நடந்த அன்று அ.சா.1 வருவாய் ஆய்வாளர் அலுவலகம் சென்று சம்பவ விபரம் குறித்து சொன்னார் என்றால் சரிதான். வருவாய் ஆய்வாளர் இவ்வழக்கு சம்பந்தமாக தாங்கள் ஒன்றும் செய்ய இயலாது நீங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுங்கள் என்று சொன்னார்கள் என்றால் சரிதான்.

3. இவ்வழக்கு சம்பவம் நடந்த பொழுது மாவட்ட கவுன்சிலர் அறிவானந்தம் உடன் இருந்தார் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்த போது மாவட்ட கவுன்சிலர் அறிவானந்தம் சம்பவம் நடந்த இடத்தில் இருந்தார் என்று போலிசார் விசாரணையில் சொன்னோமா என்றால் சொன்னோம். எதிரி அ.சா.1-யை அடித்ததில் உடல் முழுவதும் வீக்க காயமும், இரத்தத காயமும் ஏற்பட்டது என்றால் சரிதான். அறிவானந்தம் (மாவட்ட கவுன்சிலர்) சொல்லியும் எதிரி அவர் சொல் பேச்சை கேட்காததால் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள போது இவ்வழக்கின் எதிரி அ.சா.1 -யை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 -ம் ,நானும் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள் என்றும், நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொன்னதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி ஆஜர்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை-

1. நான் தி.மு.காவில் ஒன்றிய அவைத்தலைவராக இருந்து வருகிறேன். எனது சொந்த ஊரில் கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். குறிச்சி கரடு என்னும் ஊரில் மான், மயில் போன்ற உயிரினங்கள் உள்ள பகுதி என்றால் சரிதான். குறிச்சி கரடு என்னும் பகுதி யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் வருவாய் வசம் உள்ளது. குறிச்சி கரடு என்னும் பகுதி சுமார் 600 ஏக்கர் இருக்கும். குறிச்சி கரடு பகுதியில் எத்தனை ஏக்கர் அழித்தார் என்றால் சுமார் 4 ஏக்கர் அழித்துள்ளார். மேற்படி சம்பவம் ஒரே நாட்கள் மற்றும் ஒரே நாளில் நடைபெற வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். குறிச்சி கரடு என்னும் பகுதி பூனாச்சி செல்லும் சாலையில் இடது புறமாக செல்லும் பாதையில் உள்ளது என்றால் சரிதான். எதிரி அழித்தாக சொல்லப்படும் பகுதி தார் ரோட்டில் இருந்து இடதுபுறமாக ஒரு கீ.மீட்டராக தள்ளியுள்ள பகுதி என்றால் சரிதான். என்னிடம் சொன்ன நபர்கள் இந்த வழக்கின் எதிரி குறிச்சி கரடு பகுதியை அழித்து மனையாக பிரித்து விற்பனை செய்துள்ளார் என்று சொன்னார்கள் என்றால் சரிதான்.

2. இவ்வாறு பொதுமக்கள் என்னிடம் தகவல் தெரிவித்தவுடன் கிராம நிர்வாக அலுவலரிடம் தகவல் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. நான் முதல் விசாரணையில் வெட்டப்பட்ட மரங்களை போட்டோ எடுத்தேன் என்று சொன்னேன். எவ்வளவு வயதுடைய மரங்கள் வெட்டப்பட்டது என்றால் சுமார் 15 அடி உயரமுள்ள மரங்களை வெட்டியிருந்தார். சம்பவம் மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை நடைபெற்றிருந்தது. எதிரி என்னுடைய செல்போன் பிடுங்கிவிட்டதாக சொல்லியுள்ளேன். மீண்டும் எப்பொழுது எனது செல்போன் என் வசம் வந்ததது என்றால் நான் உடனடியாக எதிரியிடம் இருந்து வாங்கிவிட்டேன். 5.00 மணி முதல் 8.00 மணிக்கு மேல் நான் எனது கடைக்கு வந்து கட்சிக்காரர்கள் மற்றும் ஊர்க்காரர்கள் வந்து மீண்டும் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான்.

3. போலிசார் விசாரத்து பதிவு செய்த வாக்குமூலத்திலும் கு.வி.மு.சா விசாரத்து பதிவு செய்த விசாரணை வாக்குமூலத்திலும் என்னுடன் யார் யார் 8.00 மணிக்கு மேல் சென்ற சம்பவ இடத்திற்கு உடன் வந்தார்கள் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் எதிரி டிப்பர் லாரியில்இறங்கி வந்து என்னை செருப்பால் அடித்துவிட்டதாக சொல்லியுள்ளேன். மேற்சொன்ன விபரத்தை போலிசார் என்னை விசாரித்து பதிவு செய்த புகார் வாக்குமூலத்திலும் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரித்த போது டிப்பர் லாரி மற்றும் நான் சென்ற காரின் பதிவு எண் பற்றிய விபரங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை அடித்ததால் உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்களும் வீக்க காயங்களும்எற்பட்டது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவத்தின் போது வீக்க சிராய்ப்பு காயங்களும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கு குறிச்சி கரடில் பட்டா பூமி உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி குறிச்சி கரடு பகுதி

மக்களுக்கு பொது சேவை செய்து வருகிறார் என்றும், ஆளும் கட்சியாக இருக்கிற எங்களுக்கு எதிரி பொது சேவை செய்வது பிடிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆகவே தான் நடக்காத சம்பவத்தை நடந்ததது போல் அரசியல் பலத்தை வைத்து பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் செல்போனில் புகைப்படம் எடுத்ததாக சொல்வது தவறு. அவ்வாறு எடுத்திருந்தால் போலிசார் விசாரிக்கும் பொழுது கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னிடம் கேட்கவில்லை. நான் கொடுக்கவில்லை.